ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2363/75 - 2023 දෙසැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2023.12.22

*2363/75 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) (அ) ஆம் உப உறுப்புரையின் கீழ், என்னால் 2022, யூலை மாதம் 22 ஆந் திகதிய 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ், எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரத்தக்கதாக பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மேலும் திருத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2023, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி.

**அட்டவணை**

(1) அந்த அறிவித்தலின் "இல. 03. தொழில்நுட்ப அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் II ஆம் நிரலின் இல. 6 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் ;

7. இலங்கை தரவுப் பாதுகாப்பு அதிகார சபை

1A - G 41102 — 361 (2023/12)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) அந்த அறிவித்தலின் "இல. 14. கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் II ஆம் நிரலின் இல. 36 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் ;

37. கறுவா அபிவிருத்தி திணைக்களம்

(3) அந்த அறிவித்தலின் "இல. 22. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் II ஆம் நிரலின் இல. 7 விடயத்தை நீக்குவதன் மூலம் ;

(ஆ) அதன் III ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்;

- (1981 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) எஸ். டப். ஆர். டி. பண்டாரநாயக்க தேசிய ஞாபகார்த்த மன்றச் சட்டம்

EOG 12-0352